UNIVERSITY OF COLOMBO

# මානව සම්පත් අභිවර්ධන ආයතනය
# කොළඹ විශ්වවිද්‍යාලය
# ශ්‍රී ලංකාව

# වාර්ෂික වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්
# 2016

# மனிதவள மேம்பாட்டு நிறுவகம்
# கொழும்புப் பல்கலைக்கழகம்
# ஸ்ரீலங்கா

# ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த கணக்குகள்
# 2016

# INSTITUTE OF HUMAN RESOURCE ADVANCEMENT
*University of Colombo*
SRI LANKA

# ANNUAL REPORT AND ANNUAL ACCOUNTS
# 2016

# மனித வள மேம்பாட்டு நிறுவனம் (IHRA), கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## வருடாந்த அறிக்கை - 2016

## 1. நோக்கு

எங்கள் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள "அறிவுசார் பயனர்களாக" பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவனமாகத் திகழ்வதாகும்.

## 2. பணி

தொழில் புரிவோர், தொழில் வழங்குனர்கள், மற்றும் தொழில் முனைவோர் ஆகியோரைக் கொண்டுள்ள சகல "உழைத்தலும் கற்றலும்" வேலை - குழுக்களின் ஆற்றல்களை மேம்படுத்தி மொத்தத் தர முகாமைத்துவச் செயல்முறைகள் ஊடான விரிவான உயர் - மட்டக் கல்வியை பெற்றுக் கொடுப்பதற்கு வசதியளித்தல்.

நெறிமுறைசார் செந்தரங்கள், தொழில் முனைவுத் திறன்கள், தலைமைத்துவப் பண்புகள், மற்றும் தமது பொறுப்புக்களையும் உரிமைகளையும் புரிந்து கொள்ளல் ஆகிய ஒன்றில் ஒன்று சார்ந்துள்ள திறன்கள் உட்பட அவர்களின் பகுப்பாய்வு மற்றும் நுண்ணாய்வுச் சிந்தனைத் திறன்களை மேம்படுத்த மேலும் வசதியளித்தல்.

தேசத்தினது "அறிவுப்- பொருளாதாரத்திற்கு" பயனுறுதியானதொரு பங்களிப்பினைச் செய்யும் மேம்பட்ட மனித வள உருப்பொருள் தொகுதியாக "அறிவுத் தொழில்" குழுக்களை உருவாக்க முயலுதல்



## 3. விழுமியங்கள்

- *புதுமையான நிறுவனம்*
- *இலங்குகளை அடைவதற்கான அர்ப்பணிப்பு*
- *விடயத் துறைகளின் பன்முகத்தன்மை*
- *ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கலாச்சாரம்*
- *நம்பகத்தன்மை*
- *பொறுப்பும் பொறுப்புச்கூறும் கடப்பாடும்*
- *ஒற்றுமை*
- *சம வாய்ப்புக்கள்*



# 4. பணிப்பாளரின் மீளாய்வு



*"நாம் எமது சமுதாயம் முன்னேற முடியும் முன்னேற வேண்டும் என நம்புகின்றோம். நாங்கள் தேடுகின்ற முன்னேற்றம் தொடர்ச்சியானதும் படிப்படியானதுமாகும். நமது இலக்காகிய முன்னேற்றம் எமது சொந்தப் பொருளாதார, சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் அபிலாசைகளின் முழுமையான தழுவலாக இருக்கும். ஒரு முற்போக்கான சமுதாயம் அந்த சமுதாய மக்களின் சமூக, பண்பாட்டு, மற்றும் அரசியல் அபிலாஷைகளை அந்த சமுதாயத்தின் ஒரு யதார்த்தத்தினை உருவாக்குகின்ற சமூகமாகும் என நாம் நம்புகின்றோம்.*

2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையை நான் மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன். கூறப்பட்ட காலப்பகுதியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் கல்வியின் அனைத்துப் பரப்புகளிலும் சான்றிதழ் மட்டங்களில் இருந்து பட்டப்பின் மட்டங்கள் வரை பரந்த அளவிலான நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி வரும் ஒரு முன்னணி கல்விசார் நிறுவனமாக தேசத்திற்குத் தொடர்ந்து சேவையாற்றி வருகின்றது. கூறப்பட்ட ஆண்டில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் கல்விசார்ந்த குழுவின் நெறிப்படுத்தலுடன் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை மறுசீரமைப்பதற்கு எடுக்கப்பட்ட முன்னெடுப்பாகும்.

2016 ஆம் ஆண்டில், மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் முதன்மை நிகழ்ச்சித் திட்டமான தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித் திட்டத்தில் அண்ணளவாக 194 புதிய மாணவர்கள் பதிவுசெய்து கொண்டுள்ளதுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 567 ஆகும். மேலும், சிரேஷ்ட முகாமைத்துவ தரம் அல்லது தொழில்முறையாளர்களாக இருந்த சுமார் 277 மாணவர்கள் அவர்களின் குறித்த பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களில், அதாவது, வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், சேவை முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம், புவியியல் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி மற்றும் அனர்த்தப் பகுப்பாய்வு மற்றும் தணித்தலில் விஞ்ஞான முதுமாணி போன்ற நிகழ்ச்சிகளில் பயின்று வருகின்றார்கள்.

2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 320 மாணவர்கள் அவர்களது விடயம் தொடர்பான அறிவைப் பெருக்குவதற்காக டிப்புளோமா கற்கைநெறிகளில் சேர்ந்திருந்ததுடன் இந்த ஆண்டு காலப்பகுதியில் சான்றிதழ் கற்கைநெறிகளிற்குக் கூட மொத்தமாக 6388 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டு இருந்தனர். கூறப்பட்ட ஆண்டு காலப்பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் 18 பட்டறைகளை நடாத்தியிருந்ததுடன் மொத்தமாக 1422 மாணவர்கள் தொழில்சார் துறையொன்றில் தமது அறிவை அதிகரிக்கும் பொருட்டு இந்த பட்டறைகளில் பங்கேற்றிருந்தனர்.

நாங்கள், மனித வள மேம்பாட்டு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், மக்கள் ஒரு முன்னேற்றகரமான சமூகத்தில் வாழ வேண்டும் என ஏங்குவோர், இரண்டு உன்னத இலக்குகளை மேற்கொண்டிருந்தோம்; தேவையான அளவு மற்றும் தரத்தில் மனித திறமையை வளர்ப்பது மற்றும் கூட்டுத் தெரிவுகள் மற்றும் ஒரு கூட்டு முயற்சியை மேற்கொள்ளுமாறு பணியாளர் மற்றும் மேலாளர் ஆகிய இருதப்பினருக்கும் கல்வியறிவு அளித்தல். நாம், மனித வள மேம்பாட்டு நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம், ஒரு முற்போக்கான சமுதாயத்தில் வாழ்வது அத்துடன் மற்றவர்களையும் வாழ விட வேண்டும் என்ற கனவை உடைய உங்கள் அனைவரையும் அந்த கனவினை ஒரு யதார்த்தமாக மாற்ற எங்களுடன் இணையுமாறு வரவேற்கின்றோம்.



**பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி**
**பணிப்பாளர் மற்றும் கல்விசார் குழுவின் தலைவர்**

## உள்ளடக்கம்


| இல. | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| **01.** | **நோக்கு** | 50 |
| **02.** | **பணி** | |
| **03.** | **விழுமியங்கள்** | |
| **04.** | **பணிப்பாளரின் மீளாய்வு** | 51 |
| | **உள்ளடக்கம்** | III - IV |
| **05.** | **2016 இல் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் அடைவுகள்** | |
| 05.1 | கல்விசார் அடைவுகள் | 52 - 56 |
| 05.2 | நிர்வாக அடைவுகள் | |
| 05.3 | உடல் வசதிகள் உள்ள அடைவுகள் | |
| 05.4 | மாணவர்களின் மென்- திறன்கள் மேம்பாடு | |
| 05.5 | பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் புறப் பாடவிதான செயற்பாடுகள் | |
| **06.** | **மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றிய அறிமுகம்** | 56 - 62 |
| 06.1 | 2016 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் | |
| 06.2 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம் | |
| 06.3 | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு 2016 | |
| 06.4 | மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு | |
| **07.** | **2016 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் செயலாற்றல்** | 62 - 68 |
| 07.1 | கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 07.1.1 | இளமாணி கற்கை நிகழ்ச்சித்திட்டம் | |
| 07.1.2 | பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 07.1.3 | நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம் | |
| 07.1.4 | டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 07.1.5 | சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| 07.2 | **2016 ஆம் ஆண்டில் பயிற்சி செயலமர்வுகள் பற்றிய விபரங்கள்** | |
| 07.2.1 | மனித வள முகாமைத்துவ அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | 69 - 71 |
| 07.2.2 | சேவை முகாமைத்துவ அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | |
| 07.2.3 | விரிவாக்க நிகழ்ச்சித்திட்ட அலகினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | |

| | | |
|---|---|---|
| 07.2.4 | நூலகத்தினால் நடாத்தப்பட்ட செயலமர்வுகள் | 71 - 73 |
| 07.2.5 | மனித வள மேம்பாட்டு நிறுவன பணியாளர்களுக்கான பயிற்சி | |
| 07.3 | ஆராய்ச்சி, புதுமைகள் மற்றும் வெளியீடுகள் பற்றிய விபரங்கள் | |
| **08.** | **கல்விசார் பணியாளர், நிர்வாக மற்றும் நிர்வாகம் - சாராத பணியாளர்கள் விபரங்கள்** | **73 - 74** |
| **09.** | **நூலகம்** | **74** |
| **10.** | **நிதி நடவடிக்கைகள்** | **75 - 100** |
| 10.1 | 2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட காசுப் பாய்வுக் கூற்று | |
| 10.2 | 2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட பங்கு மூலதனம் - நிகர சொத்து | |
| 10.3 | 2016 திசெம்பர் 31ஆம் திகதி அன்று இருந்தவாறான திருத்தப்பட்ட நிதி நிலைமை கூற்று | |
| 10.4 | 2016 திசெம்பர் 31ஆம் திகதி அன்று முடிவடைந்த ஆண்டிற்கான திருத்தப்பட்ட நிதி செயலாற்றல் கூற்று | |
| 10.5 | பொதுக் கணக்குப்பரிசோதகர் அறிக்கை | |
| 10.6 | 2016ம் ஆண்டுக்கான கணக்காய்வு சம்பந்தமான கருத்ததுக்கள் | |

# 5. 2016 இல் நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் அடைவுகள்

## 5.1 கல்விசார் அடைவுகள்




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு. 2016, IHRA*

- 2016 ஆம் ஆண்டளவில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் 05 வகைகளில் கிட்டத்தட்ட நான்காயிரத்து ஐநூற்றி ஐம்பத்தி ஒன்பது (4,559) தகுதி பெற்ற அல்லது பட்டம் பெற்றவர்களை உருவாக்கியுள்ளது. அது இரு நூற்று அறுபத்து ஒன்பது (269) பட்டப்பின் பட்டதாரிகள், பதினொரு (11) பட்டப்பின் டிப்புளோமா பட்டதாரிகள், நூற்று இருபத்து நான்கு (124) பட்டதாரிகள், இரு நூற்று ஒரு (201) நிறைவேற்று டிப்புளோமா பட்டதாரிகள் மற்றும் மூவாயிரத்து எழுநூற்று நாற்பத்தெட்டு (3748) சான்றிதழ் பட்டம் பெற்றவர்களை கொண்டிருக்கின்றது. மிக உயர்ந்த விளைவு விகிதம் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்ட வகையினை பிரதிநிதித்துவப்படுத்துவது மொத்த நிகழ்ச்சித்திட்ட விளைவின் 37% ஆக இருப்பதனைக் காட்டுகின்றது. மிகவும் இழிவான விளைவு விகிதம் மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் 17% பதிவுசெய்யப்பட்டது சான்றிதழ் வகை தொடர்பிலானதாகும்.

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வருடாந்த டிப்புளேமா விருது வழங்கும் விழா 2016 ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் பேரா லக்ஷ்மன் திசாநாயக்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. முதன்மை சிறப்புரை அபிவிருத்திக்கான முகவர் நிறுவனம், அபிவிருத்தி மூலோபாயங்கள் அமைச்சின் முகாமைத்துவப் பணிப்பாளர், திரு. மங்கள பிபீ யாப்பா அவர்களினால் வழங்கப்பட்டது. நானூற்று இருபத்து ஏழு (427) டிப்புளோமாதாரிகளுக்கு இந்த பட்டமளிப்பு விழாவில் டிப்புளோமாக்கள் வழங்கப்பட்டன.





- மனித வள மேம்பாட்டு நிறுவனம் சந்தைத் தேவைகளுக்கு இணங்க ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டங்களின் பாடவிதானங்களை மறுசீரமைப்பதன் பொருட்டு முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பாடத்திட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தியது. இந்த நிகழ்ச்சி 2016 ஆம் ஆண்டு மார்ச் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் நடைபெற்றது. இறுதியாக்கப்பட்ட பாடத்திட்டம் மார்ச் 2017 காலப்பகுதியில் முதலைக்கு சமர்ப்பிக்கப்படும்.

- 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற டிப்புளோமா மற்றும் பட்டப்பின் டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கற்றல் முகாமைத்துவ முறைமையினை (LMS) அறிமுகப்படுத்தி அமுல்படுத்தியது.




- 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் புவிவெளிசார்ந்த விஞ்ஞானங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இரண்டாவது தேசிய மாநாட்டினை 2016 ஜனவரி, 18ஆம் திகதியின்று வெற்றிகரமாக நடாத்தியது. சிரேஷ்ட பேராசிரியர் லக்ஸ்மன் திசாநாயக்க, துணைவேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம் பிரதம விருந்தினராகவும் பேராசிரியர் ரஞ்ஜித் பிரேம்லால் டி சில்வா, விவசாயப் பொறியியல் பேராசிரியர், விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், முதன்மைச் சிறப்புரையை நிகழ்த்தினார். 83 சுருக்கக் கட்டுரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 48 ஆராய்ச்சி சமர்ப்பிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த மாநாடு ஒரு பெரு வெற்றியாகவிருந்தது.

- ஆசிரியர் மதிப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மாணவர் வரவுக் கொள்கை கற்றலின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அமுல்படுத்தப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில், திரு. உதரங்க சமரவிக்கிரம, புவித் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான மாணி பயின்ற மாணவர் ஒருவர் “ஆசியாவில் சிறந்த மாணவ ஆராய்ச்சியாளர்” சர்வதேச விருதினை தொலை உணர்வு தொடர்பான ஆசிய மாநாட்டிலிருந்து (ACRS - 2016) வெற்றி பெற்றிருந்தார்.

## 5.2 நிர்வாக அடைவுகள்

- மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கட்டளைச் சட்டத் திருத்தம் பேரவையின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

- அதன் அனைத்து முதுமாணி நிகழ்ச்சித்திட்டங்களுக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

- அனைத்து வகை ஊழியர்களையும் ஆட்சேர்ப்பது தொடங்கப்பட்டதுடன் சில நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டும் ஏனையவை செயல்முறைப் படுத்தப்பட்டும் இருக்கின்றன.

- பல்கலைக்கழகம் மற்றும் கல்விசார் குழுவின் வழிகாட்டலுடன், கல்விசார் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

- 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் பௌதிக உட்கட்டுமானத்திற்கு பல மேம்பாடுகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. புதிய விரிவுரை மண்டபம் மற்றும் விரிவுரையாளர்கள் அறைகள் பூர்த்தியாக்கப்பட்டன. ஒரு மலசல கூடத் தொகுதியுடனான உத்தேச கட்டடத்தின் புதிய பகுதியின் கட்டுமானம் அடுத்த 2017 நடுப்பகுதியில் தொடங்கப்படும்.

## 5.3 உடல் வசதிகளில் உள்ள அடைவுகள்

- நிறுவனத்திற்கு முறையான கழிவுநிர் வடிகால் முறைமையின் நிர்மாணிப்பினைத் தொடங்குதல்.
- நல்ல ஆட்சி மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்து நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்க்கான அரசாங்கத்தின் தொலைநோக்கினை நிறைவு செய்வதன் ஒரு பகுதியாக, 2016 ஆம் ஆண்டிலிருந்து நிறுவனத்திற்கு நிறுவனம்சார் விளைவுகள் கட்டமைப்பு ஒன்றினை பேணுவது தொடங்கப்பட்டது.

## 5.4 மாணவர்களின் மென்- திறன்கள் மேம்பாடு




- 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் கிட்டத்தட்ட 10 செயலமர்வுகளை முகாமைத்துவம் சார் மற்றும் நடுத்தர முகாமைத்துவ கற்கைநெறிகளை கற்கும் மாணவர்களுக்காக வெற்றிகரமாக நடாத்தியது. இந்த செயலமர்வுகள் இலங்கைத் தகமைகள் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்படுகின்ற மாணவர்களின் மென் திறன்களை மேம்படுத்துவதனை இலக்காக கொண்டிருக்கின்றன. அந்த செயலமர்வுகளில் மொத்தமாக ஓராயிரத்து இருநூற்று எழுபது (1,270) மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

- 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் இரண்டு வெளிச் செல்லும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை சேவை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் கற்கும் மாணவர்களுக்காக வெற்றிகரமாக நிறைவு செய்து இருந்ததுடன் நூற்றி ஐம்பத்தி இரண்டு (152) பட்டப்பின் கற்கை மாணவர்கள் அந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சுறுசுறுப்பாக பங்குபற்றியிருந்தனர்.



## 5.5 பணியாளர்கள் மற்றும் மாணவர்களின் புறப் பாடவிதான செயற்பாடுகள்

- 2016 இல், திரு. எம்எஸ்சி பெரேரா மற்றும் திரு. கேடிபி குருகம, ஆகிய மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் இரண்டு பணியாளர்கள் தேசிய அரச சேவை துடுப்பாட்ட போட்டி - 2016 இல் பங்குபற்றியிருந்ததுடன் பிரிவு பி இல் இரண்டாம் நிலை வெற்றிக் கேடயத்தை வென்றிருந்தனர்.




- சேவை முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் மாணவர்கள் “எமது ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவோம்” என்ற தொனிப் பொருளில் “IHRA துடுப்பாட்ட திருவிழா-2016” இனை ஒழுங்கு செய்தனர். இது மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் அனைத்து மாணவர்கள் மற்றும் அனைத்து கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு ஒரு பெரிய ஒன்றுகூடலாக இருந்தது. போட்டி பல்கலைக்கழக மைதான வளாகத்தில் 2016 மார்ச், 06ஆம் திகதி நடைபெற்றது. கிட்டத்தட்ட 30 அணிகள் பங்குபற்றின. மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டம் - நிகழ்ச்சித்திட்ட இல. 06 மாணவர்கள் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றனர். ஒழுங்கமைப்பாளர்களினால் ஆறு சிறிய கேடயங்கள் வழங்கப்பட்டன. தொடரின் சிறந்த ஆட்டக்காரருக்கான விருது மனித வள முகாமைத்துவ முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் - 6வது தொகுதியில் இருந்து திரு. ஐயு விஜேரட்ண அவர்களினால் வெல்லப்பட்டிருந்தது.




- தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்ட மாணவர்கள் “*BLE* வசந்த உதானய 2016” இனை ஒழுங்கு செய்திருந்தார்கள். இது மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தில் பட்டத்தைத் தொடரும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க சமூக நிகழ்வாக இருந்தது. இந்த நிகழ்ச்சி 2016 மே 15ஆம் திகதி நடைபெற்றதுடன் அந்தக் கணத்தில் காணப்பட்ட தீவிர காலநிலை நிலமைகள் காரணமாக, இடம் பல்கலைக்கழக மைதானத்தில் இருந்து பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கூடத்திற்கு மாற்றப்பட்டது. பேரா. ஜேஏஎஸ்கே ஜயக்கொடி, நிறுவனத்தின் பணிப்பாளர் நிகழ்வின் பிரதம விருந்தினராக இருந்தார். கிட்டத்தட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் 500 மாணவர்கள் பங்குபற்றியிருந்ததுடன் ஒழுங்கமைப்பு குழுவினால் நடாத்தப்பட்ட பல்வேறு நிகழ்வுகளில் அநேகமான மாணவர்கள் பரிசில்களை வென்றனர்.




- 2016 ஆம் ஆண்டில், பிறிதொரு துடுப்பாட்டப் போட்டி BLE மாணவர்களினால் நடாத்தப்பட்டிருந்ததுடன் அது “BLE துடுப்பாட்டத் திருவிழா - 2016” எனப் பெயரிடப்பட்டிருந்தது. இந்தப் போட்டி BLE மாணவர்கள், BLE நிகழ்ச்சித்திட்டத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்காக மாத்திரம் வடிவமைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 20 அணிகள் போட்டிகளில் பங்குபற்றியிருந்ததுடன் வீரமுதல்வன் வெற்றிக் கேடயம் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் ஊழியர் அணியினால் வெல்லப்பட்டிருந்தது.

- BLE பகுதி III மாணவர்கள் ஒரு இரத்த தான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை 2016 செப்தெம்பர் 08ஆம் திகதியன்று பல்கலைக்கழக வளாகத்தில் வெற்றிகரமாக நடாத்தியிருந்தனர். கிட்டத்தட்ட 100 கொடையாளிகள் நோயாளர்களுக்கு இரத்த தானம் வழங்கி பங்களிப்புச் செய்திருந்தனர்.





## 6. மனித வள மேம்பாட்டு நிறுவனம் பற்றிய அறிமுகம்

மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் வரலாறு கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களுக்கு அதன் முன்னோடியான; 1979 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ், அது 2006 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்டது, 1975 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட தொழிலாளர் கல்வி நிறுவனம் வரை பின் செல்கின்றது. 2006 ஆம் ஆண்டில், தொழிலாளர் கல்வி நிறுவனம் மனித வள மேம்பாட்டு நிறுவனம் என பெயரிடப்பட்டது. மனித வள மேம்பாட்டு நிறுவனம், நாட்டின் மிகவும் பழைமையான பல்கலைக்கழகமாகவும் உலகில் உச்ச 1000 பல்கலைக்கழகங்களில் ஒன்றான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு நிறுவனமாக உள்ளது.

அதன் சுமார் நான்கு தசாப்த வரலாற்றுக் காலப் பகுதியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் சுற்றுச்சூழலினுள் பல மாற்றங்களையும் புதிய மேம்பாடுகளையும் கண்டிருக்கின்றது, அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின் தனியார்த் துறையின் வளர்ச்சி-, அறிவுசார் பொருளாதாரத்தின் தோற்றம் மற்றும் தொழிலாளர் படையின் பூகோளமயமாக்கல் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. இந்த அபிவிருத்திகளை தழுவும் அதன் முயற்சியில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் தொடர்ச்சியாக பரிணாம வளர்ச்சியடைந்து இருப்பதுடன் அதன் அசல் நோக்கம் "வேலை- குழுக்களை கற்பித்தல்" ஒரு புதிய கருத்தினைப் பெற்றிருக்கின்றது. தற்பொழுது உள்ளவாறு "வேலை-குழு" எனக் கருதப்படுவது "முகாமைத்துவம்சார்/ தொழில்சார் வேலை-குழுக்கள்", மற்றும், மனித வள மேம்பாட்டு நிறுவனம் "முகாமைத்துவம்சார்/ தொழில்சார் வேலை-குழுக்களின்" மனித திறனையும் கூட மேம்படுத்துவதற்கு உறுதி பூண்டுள்ளது.

ஒரு நிறுவனமாக, அதன் கல்விசார் செயற்பாடுகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நெருக்கமான அவதானிப்பிற்கு உட்பட்ட, ஆகையால் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் அனைத்து கல்விசார் அலுவல்களிலும் அதிக தரங்களைப் பேணுவதற்கு கட்டுப்பட்டிருப்பதுடன் எந்த உயர் கற்றல் நிறுவனமும் பேண வேண்டியுள்ள நல்ல பாரம்பரியங்களைத் தொடர்கின்றது.

தொழிலாளர் கல்வி நிறுவனம் தொடக்கத்தில் அனைத்து வகையான வேலையாட்களுக்கும் ஒரு பணியாளராக அவர்களுடைய வேலைத் தலத்தில் பயனுறுதியான பங்களிப்பினை வழங்குமாறு அவர்களுடைய பொறுப்புக்களை புரிந்துகொள்ளுதல் மற்றும் அவர்களுடைய திறன்கள், தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துதற் பொருட்டு ஏற்றுக் கொள்ளத்தக்க தரமான விரிவான உயர் தரமான கல்வி வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுடன் முக்கியமாக 1983 ஆம் ஆண்டு வரை கலை இளமாணி பட்டத்தினை வழங்கியது. எவ்வாறாயினும், 1986 ஆம் ஆண்டில் தொழிலாளர் கல்வி நிறுவனம் தொழிலாளர் கல்வியில் இளமாணிப் (BLE) பட்டத்தை வழங்கத் தொடங்கியது. 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் கல்விசார் நடவடிக்கைகளை விரிவாக்கியதுடன் முதுமாணிப் பட்டங்களையும் கூட வழங்க ஆரம்பித்தது. 2015-2016 ஆம் ஆண்டுகளில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் அதன் கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை மீள- ஆராய்ந்ததுடன் கற்கைநெறிகளை இளமாணி நிகழ்ச்சித் திட்டம், பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள், நிறைவேற்று டிப்புளோமாக்கள், டிப்புளோமாக்கள் மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகள் என ஐந்து நிகழ்ச்சித்திட்ட வகைகளின் கீழ் வழங்கத் தீர்மானித்தது. 2016 ஆம் ஆண்டில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் 05 முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், 12 டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் 11 சான்றிதழ் கற்கைநெறிகளை தொழிலாளர் சமூகத்திற்கும் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கும் வழங்கியது. (அட்டவணை 1.1: 2016 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்).

2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில், மொத்த மாணவர் உள்ளெடுப்பு 7,233 ஆகவிருந்தது. பால் பரம்பல் மற்றும் கற்கைநெறி வகைகளுக்கு இடையே மாணவர் உள்ளெடுப்பின் தொடர்பான பங்கு விபரங்கள் உரு2 இல் சமர்பிக்கப்பட்டிருக்கின்றன.




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு. 2016, IHRA*

மனித வள மேம்பாட்டு நிறுவனம் தேசிய அபிவிருத்தியின் மனித அத்திவாரத்தை வலுவூட்டும் முதிர்ந்த, விவேகமுள்ள “அறிவுசார் பயனர்களாக” பூகோள நிலைமைகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல் படைத்த மனித வளத்தினை மேம்படுத்துவதற்கு முழுவதுமாக அர்பணிக்கப்பட்ட சால்புமிகு நிறுவனமாகத் திகழ்வதற்கு எதிர்பார்த்து இருக்கின்றது. இந்த முடிவினை நோக்கி, மனித வள மேம்பாட்டு நிறுவனம் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து மரபுரிமையாகப் பெறப்பட்ட வளமான கல்விசார் பாரம்பரியம் மற்றும் உயர் கல்விசார் செந்தரங்களை.

பலப்படுத்துகின்ற அதேவேளை ஒரு பாரிய மாற்றத்திற்கு உட்படுகின்றது. இந்த மாற்றம், நல்லாட்சி நிர்வாகத்திற்கான தரங்களை அடைந்து, அதிகம் தேடப்படுகின்ற ஊழியர் தர அடையாளம் மற்றும் ஒரு சமூகப் பொறுப்புள்ள பொது நிறுவனமாக வருவதற்கு உள்ளுர் மற்றும் உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## 6.1 2016 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள்

| இல. | கற்கைநெறியின் பெயர் |
|---|---|
| | **இளமாணி பட்ட நிகழ்ச்சித் திட்டம்** |
| 01 | தொழிலாளர் கல்வி இளமாணி மற்றும் தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா |
| | **பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| 02 | வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் |
| 03 | மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் |
| 04 | சேவை முகாமைத்துவத்தில் முதுமாணி |
| 05 | புவியியல் தகவல் நுட்பத்தில் விஞ்ஞான முதுமாணி |
| 06 | அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் தணித்தலில் விஞ்ஞான முதுமாணி ment and |
| | **நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| 07 | மனித வள முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 08 | சேவை முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 09 | அனர்த்தப் பகுப்பாய்வு முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 10 | திட்ட முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |

| | |
|---|---|
| 11 | சுற்றுலா நிகழ்ச்சிகள் மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா |
| 12 | ஒலி, காணொளி தயாரிப்பு மற்றும் ஊடகத் தொழில்நுட்பத்தில் உயர் டிப்புளோமா |
| | **டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள்** |
| 13 | சேவை முகாமைத்துவத்தில் டிப்புளோமா |
| 14 | போதைப் பொருள் துஷ்பிரயோக முகாமைத்துவ கற்கைகளில் நிறைவேற்று டிப்புளோமா |
| 15 | ஆலோசனை உளவியலில் டிப்புளோமா |
| 16 | மேலதிக மொழியாக தமிழில் டிப்புளோமா |
| 17 | தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தில் டிப்புளோமா |
| 18 | முகாமைத்துவத்தில் டிப்புளோமா |
| | **சான்றிதழ் கற்கைநெறிகள்** |
| 19 | ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கைநெறி |
| 20 | ஆங்கிலத்தில் அடிப்படைக் கற்கைநெறி |
| 21 | ஆசிரியர்களுக்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி |
| 22 | பேச்சு ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கைநெறி |
| 23 | பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கான ஆங்கிலம் குறுகிய கற்கைநெறி |
| 24 | கணினி பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி |
| 25 | முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கைநெறி |
| 26 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - அடிப்படை |
| 27 | தமிழ் மொழியில் சான்றிதழ் கற்கைநெறி - இடைநிலை |
| 28 | வியாபாரத்தில் கணினி பிரயோகங்களில் சான்றிதழ் கற்கைநெறி |
| 29 | CCNA கற்கைநெறி |

## 6.2 மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் முகாமைத்துவம்

நிறுவனத்தின் பணிப்பாளர், அதன் நிர்வாக மற்றும் கல்விசார் தலைவராவர், அவர் ஒரு முழுநேர உத்தியோகஸ்த்தர், மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் கல்விசார் குழுவின் பரிந்துரையின் பேரில் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் அனுமதியுடன் துணைவேந்தரினால் நியமிக்கப்படுபவர். லுவலராகவும்

பணிப்பாளர் கல்விசார் குழுவின் தலைவராக, கற்கைகள் சபைகளின் ஒரு பதவி வழி உறுப்பினராக இருக்கின்றார். அவர் நிறுவனத்தின் பிரதான பொறுப்புக் கூறும் அலுவலர் ஆகவும் நிறுவனத்தினுள் ஒழுக்காற்றிற்குப் பொறுப்பான அலுவலராகவும் உள்ளார்.

பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி, கொழும்புப் பல்கலைக்கழக முகாமைத்துவ மற்றும் நிதிப் பீடத்தில் முகாமைத்துவம் மற்றும் நிறுவன கற்கைகள் துறையில் இணைப் பேராசிரியராக இருப்பவர், 2015 ஆகஸ்ட், 25ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் மூன்று வருடங்களுக்கு நிரந்த பணிப்பாளராக நியமிக்கப்பட்டு இருக்கின்றார்.

நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

## 6.3 மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிர்வாகம்சார் நிறுவனக் கட்டமைப்பு 2016




கல்விசார் குழு நிறுவனத்தின் கல்விசார், நிர்வாக, மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் மீது நிர்வாக மற்றும் மேற்பார்வை கட்டுப்பாட்டினை மேற்கொள்ளும் சட்டரீதியான அதிகார சபையாகும். உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு. அது 2016 ஆம் ஆண்டில் 14 கூட்டங்களை நடாத்தியது.

## 6.4 மனித வள முகாமைத்துவ நிறுவனத்தின் கல்விசார் குழு

| 01 | பேரா. ஜேஏஎஸ்கே ஜயக்கொடி | தலைவர் |
|---|---|---|
| 02 | பேரா. அத்துல ரணசிங்க | பதவிவழி உறுப்பினர் |
| 03 | பேரா. டபிள்யூ சந்திரதாஸ | பதவிவழி உறுப்பினர் |
| 04 | பேரா. கேஆர்ஆர் மஹாநாம | பதவிவழி உறுப்பினர் |
| 05 | பேரா. கே குணவர்த்தன | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 06 | பேரா. (திருமதி) நயனி மெலகொட | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 07 | பேரா. (திருமதி) டிநுகா விஜேதுங்க | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 08 | திரு. ஏச்எம்என் வரக்காஉல்ல | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 09 | திரு. என் செல்வக்குமரன் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 10 | திரு. டிஎம்எஸ் தசநாயக்க | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் |
| 11 | திரு. கேஏ விமலேந்திரராஜா | திறைசேரி பிரதிநிதி |
| 12 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | கற்கைச் சபை பிரதிநிதி |
| 13 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | கற்கைச் சபை பிரதிநிதி |
| 14 | திருமதி பீகேபி அபேசூரிய | கற்கைச் சபை பிரதிநிதி |

இந்த கல்விசார் குழு மூன்று (03) கற்கைகள் சபைகளைக் கொண்டிருக்கின்றது. 2016 ஆம் ஆண்டில் அது 34 கற்கைகள் சபை கூட்டங்களை நடாத்தியது. அதன் உறுப்பினர்கள் விபரம் பின்வருமாறு:

- **மனித வள கல்வி தொடர்பான கற்கைச் சபை (13 கூட்டங்கள்)**

| 01 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | தலைவர் |
|---|---|---|
| 02 | பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி | உறுப்பினர் (பணிப்பாளர்/மனித வள மேம்பாட்டு நிறுவனம்) |
| 03 | கலா. என்என்ஜே நவரட்ண | உறுப்பினர் |
| 04 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | உறுப்பினர் |
| 05 | கலா. டிஏசீ சில்வா | உறுப்பினர் |
| 06 | கலா. எஸ் கொப்பரஹேவா | உறுப்பினர் |

- **விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கற்கைச் சபை (11 கூட்டங்கள்)**

| 01 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | தலைவி |
|---|---|---|
| 02 | பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி | உறுப்பினர் (பணிப்பாளர்/மனித வள மேம்பாட்டு நிறுவனம்) |
| 03 | பேரா. எஸ்ஆர்டி ரோசா | உறுப்பினர் |
| 04 | கலா.ஆர் பிறேமசிரி | உறுப்பினர் |
| 05 | திரு. கேடிஎன் ஹேவகே | உறுப்பினர் |
| 06 | திரு. கே கமகே | உறுப்பினர் |

- **மொழி போதனை நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கற்கைச் சபை (10 கூட்டங்கள்)**

| 01 | திருமதி பீகேபி அபேசூரிய | தலைவி |
|---|---|---|
| 02 | பேரா. ஜேஏஎஸ்கே ஜயகொடி | உறுப்பினர் (பணிப்பாளர்/மனித வள மேம்பாட்டு நிறுவனம்) |
| 03 | திரு. பிஜேசீ சில்வா | உறுப்பினர் |
| 04 | திரு. டபிள்யூடபிள்யூ டி சில்வா | உறுப்பினர் |
| 05 | திருமதி டபிள்யூ ஜயவர்த்தன | உறுப்பினர் |
| 06 | திரு. எச்டி தர்மசேகர | உறுப்பினர் |
| 07 | திருமதி ரி சுரேந்திரன் | உறுப்பினர் |

கல்விசார் குழு ஐந்து (05) குழுக்களைக் கொண்டிருக்கின்றது. அந்தக் குழுக்களின் உறுப்பினர்களின் விபரம் கீழே தரப்படுகின்றது;

- **கணக்காய்வு குழு (ஒரு சுயாதீனமான அமைப்பு)**

| 01 | பேரா. டபிள்யூ சந்திரதாஸ | தலைவர் |
|---|---|---|
| 02 | பேரா. கே குணவர்த்தன | உறுப்பினர் |
| 03 | திரு. எச்எம்என் வரக்காஉல்ல | உறுப்பினர் |
| 04 | திரு. கேஏ விமலேந்திரராஜா | திறைசேரி பிரதிநிதி |

- **கொள்வனவுக் குழு**

| 01 | பேரா. ஜேஏகேஎஸ் ஜயக்கொடி | தலைவர் (பணிப்பாளர்/ஐஎச்ஆர்ஏ) |
|---|---|---|
| 02 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | உறுப்பினர் |
| 03 | திருமதி ஜேஎஸ்விஎன்ரி சோயிஷா | உறுப்பினர் |
| 04 | திருமதி எச்ஜிடி ஸ்ரீயாணி | உறுப்பினர் |

- **நிதி குழு**

| 01 | பேரா. ஜேஏகேஎஸ் ஜயகொடி | தலைவர் (பணிப்பாளர்/ஐஎச்ஆர்ஏ) |
|---|---|---|
| 02 | திருமதி ஜேஎஸ்விஎன்ரி சோயிஷா | உறுப்பினர் (செயலாளர்) |
| 03 | கலா. (திருமதி) டினுகா விஜேதுங்க | உறுப்பினர் |
| 04 | திரு. டிஎம்எஸ் தசநாயக்க | உறுப்பினர் |
| 05 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | உறுப்பினர் |
| 06 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | உறுப்பினர் |
| 07 | திருமதி பீகேபி அபேசூரிய | உறுப்பினர் |
| 08 | திருமதி எச்ஜிடி ஸ்ரீயாணி | உறுப்பினர் |

- **ஆராய்ச்சி முகாமைத்துவ குழு**

| 01 | பேரா. கேஆர்ஆர் மஹாநாம | பீடாதிபதி/ விஞ்ஞான பீடம் |
|---|---|---|
| 02 | பேரா. டபிள்யூ சந்திரதாஸ | பீடாதிபதி/ கல்விப் பீடம் |
| 03 | பேரா. அத்துல ரணசிங்க | பீடாதிபதி/ கலைப் பீடம் |

- **கட்டடக் குழு**

| 01 | பேரா. ஜேஏகேஎஸ் ஜயக்கொடி | தலைவர் (பணிப்பாளர்/ஐஎச்ஆர்ஏ) |
|---|---|---|
| 02 | திருமதி எச்ஜிடி ஸ்ரீயாணி | உறுப்பினர் |
| 03 | திரு. எச்எம்என் வரக்காஉல்ல | உறுப்பினர் |
| 04 | திரு. கேஏ விமலேந்திரராஜா | திறைசேரி பிரதிநிதி |

- **நூலக குழு**

| 01 | **பேரா. ஜேஏகேஎஸ் ஜயக்கொடி** | **தலைவர் (பணிப்பாளர்/ஐஎச்ஆர்ஏ)** |
|---|---|---|
| 02 | திருமதி ஆர்எம்எஸ்என் ரட்நாயக்க | உறுப்பினர் (செயலாளர்) |
| 03 | திரு. எம்ஜிஜி ஹெமகுமார | உறுப்பினர் |
| 04 | திருமதி கேபி மாதொட்டாராச்சி | உறுப்பினர் |
| 05 | திரு. கேடிஎன் ஹெவகே | உறுப்பினர் |
| 06 | திரு. எஸ் சத்தியசீலன் | உறுப்பினர் |
| 07 | திருமதி ஜேஎஸ்வின்ஸ்ரி சோயிஷா | உறுப்பினர் |
| 08 | திருமதி டிசி பெரேரா | உறுப்பினர் |
| 09 | திருமதி எச்ஜிடி ஸ்ரீயாணி | உறுப்பினர் |
| 10 | திரு. பிபீபிடி டி சில்வா | உறுப்பினர் |
| 11 | திரு. ஈஎன்சி பெரேரா | உறுப்பினர் |
| 12 | திரு. வீஎன்பி லியனகே | உறுப்பினர் |

## 7. 2016 ஆம் ஆண்டில் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் செயலாற்றல்

### 7.1 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்கள்

2016 இல், மனித வள மேம்பாட்டு நிறுவனம் பிரிவு 1.1. இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு 29 கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

1. இளமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டம்
2. முதுமாணிப் பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்
3. நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
4. டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள்
5. சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள்

#### 7.1.1 இளமாணி கற்கை நிகழ்ச்சித்திட்டம்

தொழிலாளர் கல்வியில் இளமாணி (BLE) பட்ட நிகழ்ச்சித்திட்டம் மாத்திரமே அரச நிதிகளினால் ஆதரவளிக்கப்பட்டு மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் 37 வருடங்களுக்கு மேலாக நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் இரண்டு கூறுகளைக் கொண்டிருக்கின்றது தொழிலாளர் கல்வியில் இளமாணி(BLE) மற்றும் தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா. தொழிலாளர் கல்வியில் இளமாணி(BLE) நிகழ்ச்சித்திட்டத்தின் கற்கைக் காலம் ஆறு (06) அரையாண்டுகளை உள்ளடக்கிய 3 வருடங்களாக இருக்கின்றது. பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்கு நேரடியாகப் பதிவு செய்து கொள்வதற்கு தகுதி இல்லாத விண்ணப்பதாரிகள் ஒரு வருட டிப்புளேமா நிகழ்ச்சித்திட்டத்தினைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்ட முடியும். இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் வாய்ப்புச் சோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை இரண்டும் நுழைவு அளவுகோலாக பிரயோகமாகும்.

2016 ஆம் ஆண்டில், 467 விண்ணப்பதாரிகள் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தார்கள் அனைத்து விண்ணப்பதாரிகளிலும் 42% ஆன பரீட்சார்த்திகள் மாத்திரமே நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடரத் தகுதி பெற்றிருந்தனர். நூற்றி தொன்னூற்று நான்கு (194) இளமாணிப் பட்ட விண்ணப்பதாரிகள் பதிவுசெய்யப்பட்டதுடன் அது 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது அண்ணளவாக 23% ஆக இருந்தது.

உரு 3 இல் காட்டப்பட்ட வாறு, இளமாணிக் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தில் ஆண்களின் விகிதாசாரம் 55% ஆக இருந்தது.




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2016, IHRA*

தொடக்க விழா 2016 மே, 29ஆம் திகதியன்று கொழும்புப் பல்கலைக்கழக புதிய கலைகள் அரங்கத்தில் நடைபெற்றது. 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த கல்விசார் நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு மட்டங்களில் மொத்த எண்ணிக்கையாக 567 இளமாணிப் கற்கை மாணவர்கள் பதிவுசெய்யப்பட்டு இருந்தார்கள். 2012 ஆம் ஆண்டில் இருந்து தொடங்கும் கடந்த 5- வருட காலப் பகுதி பற்றிய பகுப்பாய்விற்கு இணங்க, பட்டமளிக்கப்பட்ட வெளியீடுகளின் ஒட்டுமொத்த சராசரி 76.6% ஆக 2016 ஆம் ஆண்டில் காட்டப்பட்டது.

**தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2012 – 2016**

| நிகழ்ச்சித்திட்டம் | மாணவர் உள்ளெடுப்பு எண்ணிக்கை | | | | | பட்டமளிக்கப்பட்ட/ தகுதிவாய்ந்த மாணவர்களின் எண்ணிக்கை[1] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| தொழிலாளர் கல்வி இளமாணி | 221 | 189 | 137 | 157 | 194 | 112 | 153 | 153 | 119 | 124 |
| தொழிலாளர் கல்வியில் டிப்புளோமா | 54 | 55 | 59 | 51 | 54 | 37 | 49 | 37 | 42 | 32 |

**தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2012 – 2016**







*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு 2016, IHRA*

**தொழிலாளர் கல்வி டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்: 2012 – 2016**







*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2012- 2016, IHRA*

[1] *அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்பட்ட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

### 7.1.2 பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள்

மனித வள மேம்பாட்டு நிறுவனம் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வித்தியாசமான விடயப் பரப்புக்களில் ஐந்து பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கியது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களின் குறிக்கோள் அவர்களுக்கு பொருத்தமான துறைகளில் தொழில் வாண்மையாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை மேம்படுத்துவதாக இருக்கின்றது. மனித வள மேம்பாட்டு நிறுவனம் முகாமைத்துவ கற்கைகளுடன் தொடர்புபட்ட மூன்று பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கின்றது. முகாமைத்துவ தொழில்களில் சம்பந்தப்பட்டுள்ள மாணவர்கள் அனைத்து முக்கிய முகாமைத்துவ ஒழுக்கங்களிலும் அறிவு மற்றும் விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் அதிக நம்பிக்கையுடன் வியாபார பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை சமாளிப்பதற்கு தேவையான கருத்தியல் மற்றும் பகுப்பாய்வு கருவிகளையும் கூட வழங்குகின்றது.

நிறுவனம் இரண்டு விஞ்ஞான மாணி நிகழ்ச்சித் திட்டங்களை புவித்தகவலியல் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பகுப்பாய்வு விடயப் பரப்புக்களில் நடாத்தியது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் புவித்தகவலியலில் மற்றும் அனர்த்த முகாமைத்துவப் பரப்புக்களில் மதிப்பிடல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் துறை பூராகவும் வளங்களை முகாமை செய்தல் ஆகியனவற்றினுள் சிறப்படைய விரும்பும் மாகணவர்களுக்காக வடிவமைக்கப் பட்டிருக்கின்றன. ஒரு நவீன விஞ்ஞான பாடமாக, புவித்தகவலியல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான கேள்வி சிறிதளவு அதிகரித்தது. 2016 ஆம் ஆண்டில், நூற்று நாபத்தியொரு (141) விண்ணப்பதாரிகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு விண்ணப்பித்து இருந்ததுடன் போட்டி நேர் முகத் தேர்வு ஒன்றின் பின்னர் எண்பத்து மூன்று (83) விண்ணப்பதாரிகள் மாத்திரம் நிகழ்ச்சித் திட்டத்தினைத் தொடர்வதற்கு தகுதியானவர்களாக இருந்தனர்.

மார்ச்சில், மனித வள மேம்பாட்டு நிறுவனம் பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒரு பாடவிதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்தினதும் பாடத்திட்டத்தினை சந்தைத் தேவைகளுக்கு இணங்க மறுசீரமைப்பதற்காக பொது மற்றும் தனியார் கல்விமான்கள் மற்றும் நிபுணர்களின் பங்கேற்புடன் நடாத்தியது. பாடவிதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு விளைவாக அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவும் மற்றும் தணித்தல் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாணவர் பதிவு தற்காலிகமாக 2016 ஆம் ஆண்டில் நிறுத்தி வைக்கப்பட்டது.




*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2012- 2016, IHRA*

நான்கு பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மொத்தமாக 277 தொழில்வல்லுனர்கள் அனுமதிக்கப் பட்டதுடன் ஆண்டு காலப் பகுதியில் புவித்தகவலியலில் விஞ்ஞான மாணி நிகழ்ச்சித் திட்டம் அதிகமான உள்ளெடுப்பினைக் காட்டியது. பட்டமளிக்கப்பட்ட வெளியீடு 2012 - 2016 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஒரு படிப்படியான அதிகரிப்பினைக் காட்டியது.

பதிவுசெய்யப்பட்ட ஆண்களின் விகிதாசாரம் பெண்களினதை விட மிகவும் பெரிதானதாக இருந்தது. பதிவு செய்யப்பட்ட 61% உடன் ஒப்பிடப்பட்ட போது 39% மாத்திரமே பெண்களாக இருந்தனர்.

2015 ஆம் ஆண்டிற்கான பட்டப்பின் பட்டமளிப்பு விழா 2016 திசெம்பர் 6ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழகம் மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற 5 கற்கைநெறிகளிலில் இருந்து பட்டப்பின் பட்டதாரிகள் தொடர்பில் 245 பட்டப்பின் பட்டங்களை வழங்கியது.

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயலாற்றல்: 2012 - 2016**

| இல | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | பட்டமளிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை[2] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| 01 | வியாபார முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | 104 | 162 | 160 | 172 | 61 | - | - | 77 | 87 | - |
| 02 | மனித வள முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | 181 | 173 | 146 | 135 | 67 | 64 | 64 | 113 | 85 | 93 |
| 03 | சேவை முகாமைத்துவத்தில் முதுமாணிப் பட்டம் | 114 | - | 112 | 121 | 66 | - | - | - | 43 | 88 |
| 04 | புவியில் தகவல் நுட்பத்துவத்தில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | 44 | 50 | 51 | - | 83 | - | 11 | 07 | 07 | 62 |
| 05 | அனர்த்தப் பகுப்பாய்வு, முகாமைத்துவம் மற்றும் தணித்தலில் விஞ்ஞான முதுமாணிப் பட்டம் | - | 65 | 50 | - | - | - | - | - | 25 | 26 |
| | **மொத்தம்** | **443** | **450** | **519** | **428** | **277** | **64** | **75** | **197** | **247** | **269** |

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2012 – 2016**







*ஆதாரம்: திரட்டப்பட்ட தரவு, 2012 - 2016, IHRA*

### 7.1.3 நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டம்

ஒரு நிறைவேற்று டிப்புளோமா பொருத்தமான துறைப் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு தொழில் வாண்மையாளருக்கு ஒரு தனிப்பட்ட தகமையாக உள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள் முகாமையாளர்களுக்கு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட துறைகளில் அவர்களின் அறிவனை நாளதுவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான சந்தர்ப்பங்களை வழங்குவதாக இருக்கும். இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் அவர்களின் அறிவினை மேம்படுத்த நாடும் நடுத்தர நிறைவேற்றுனர்களுக்குகாக வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

அத்துடன், நிறைவேற்று டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள், பங்குபற்றுனர்களுக்கு அவர்களுடைய வாடிக்கையாளர்களுடன் வினைத்திறனாகப் பணியாற்றுவதற்கு அவர்களுடைய சொந்த வேருன்றியுள்ள நடத்தை முறைகளுக்கு சவால்விடும் சொந்த அனுபவங்களை கொண்டிருப்பது அத்தியாவசியமாக இருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கையில் வேருன்றியுள்ளதன் அடிப்படையில் தனிப்பட்ட மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்றன.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகின்ற போது, 2016 ஆம் ஆண்டிற்கான மாணவர் பதிவு கிட்டத்தட்ட 52% ற்கு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் ஆறு நிகழ்ச்சித் திட்டங்களில் கிட்டத்தட்ட 66% மாணவர்கள் நிறைவேற்று டிப்புளோமாக்களுடன் தகுதியடைந்திருந்தனர். மனித வள மேம்பாட்டு நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களை ஓட்டத்தில் இடும் ஒரு நோக்கத்துடன் வருட காலப் பகுதியில் அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளேமா மற்றும் ஒலி காணொளி தயாரிப்பு மற்றும் ஊடகத் தொழில்நுட்பத்தில் உயர் டிப்புளோமா நிகழ்ச்சித் திட்டங்கள் கைவிடப்பட்டன.

*2 அட்டவணை/ விளக்கப்படத்தில் காட்டப்படட இந்த தரவு வருட காலப் பகுதியில் பட்டமளிக்கப்பட்ட அல்லது பொருத்தமான தகமைகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையைக் குறித்துக் காட்டுகின்றது. இரு குறித்த வருட உள்ளெடுப்பிற்கு மேற்கோளைக் காட்டவில்லை.*

**மனித வள மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட நிறைவேற்று டிப்புளோமா பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் மாணவர் செயலாற்றல்: 2012 – 2016**

| இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த உள்ளெடுப்பு | | | | | தகுதிவாய்த மாணவர்களின் எண்ணிக்கை[3] | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| 01 | மனித வள முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 75 | 68 | 97 | 113 | 35 | 40 | 38 | 34 | 61 | 81 |
| 02 | திட்ட முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | - | 29 | - | 31 | - | - | - | - | 13 | - |
| 03 | அனர்த்த பகுப்பாய்வு முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | - | 45 | 43 | - | - | - | - | 25 | - | 23 |
| 04 | சேவை முகாமைத்துவத்தில் நிறைவேற்று டிப்புளோமா | 35 | 81 | 83 | 94 | 107 | - | 62 | 50 | 59 | 51 |
| (இ) 2015 யூன் 14 ஆந் திகதிய இல 03/2015 ஆகிய அரச நிதி சுற்றறிக்கை | குறித்த நோக்கம் முடிவடைந்த நேரத்தில் சீர்செய்யப்படவேண்டிய போதிலும் 5 தடவைகள் வழங்கப்பட்ட கூட்டுமொத்த தொகை ரூபா. 44,925 பெறுமதியான முற்பணம் சீர்செய்ய 60 - 110 நாட்கள் வரையான காலம் முடிவடைந்திருந்தது. மற்றும் 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கூட்டுமொத்த தொகை ரூபா 115,381 பெறுமதியான முற்பணம் 2017 ஜனவரி 24 ஆம் திகதி வரை சீராக்கம் செய்யப்படவில்லை. |
| (ஈ) 2004 யூலை 29 ஆம் திகதி இல பீஈடி/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச வியாபாரங்களுக்கு சொந்தமான காசு முதலீடு செய்யும் போது அது சம்பந்தமாக திறைசேரியில் அனுமதி பெறவேண்டியிருந்த போதும் 2015 ஆம் ஆண்டில் ரூபா. 89.5 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 40 மில்லியன் பெறுமதியான முதலீடு சம்பந்தமாக திறைசேரி அனுமதி பெறப்படவில்லை என்பது பற்றி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. |
| (உ) 1995 யூலை 14 ஆம் திகதிய இல 636 ஆகிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சைகள் நடந்த திகதியில் இருந்து 3 மாத காலப்பகுதிக்குள் அதன் பெறுபேறு வெளியிடவேண்டியிருந்த போதும் அதற்கு எதிராக நிறுவனத்தில் 2015 மற்றும் 2016 வருடத்தில் நடாத்தப்பட்ட 5 பரீட்சைக்கான |

பெறுபேறு வெளியிடுவதற்கு 5 - 7 மாதம் வரை தாமதமாகியிருந்தது. 2016 யூன் மாதத்தில் நடைபெற்ற பரீட்சைக்கான பெறுபேறு கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 30 வரை வெளியிடப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான நிறுவக செயற்பாடுகளில் நிதி விளைவு ரூபா. 61,576,424 மிகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் மிகையாக ரூபா 24,437,356 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா. 37,139,068 முன்னேற்றத்தை காட்டுகின்றமைக்கான காரணம் பயிற்சி நெறிக்கான செலவு ரூபா. 33,437,619 ஆல் குறைவடைந்தமையாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா. 2,112,639 ஆல் அதிகரித்தமையும் ஆகும்.

2012 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ரூபா. 19,061,471 ஆக இருந்த மிகை 2014 ஆம் வருட முடிவில் ரூபா. 11,340,232 ஆக குறைவடைந்துள்ளது. அதன் பின் வருடங்களில் சாதாரணமாக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா. 576,424 ஆக காணப்படுகிறது. அப்படியாக இருந்த போதிலும் நிதி பெறுபேற்றிற்கு நடைமுறையல்லா சொத்தில் உள்ள உத்தியோகத்தரிற்கு கிடைத்த சம்பளத்திற்காக பெறுமானத்தேய்வு மீளாய்வு செய்யும் போது 2012 ஆம் வருடத்தில் ரூபா. 49,124,600 பெறுமதியான பங்களிப்பும் 2014 ஆம் ஆண்டு முடிவில் ரூபா. 47,458,572 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வு ஆண்டு முடிவு வரை ரூபா. 104,774,561 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

கற்கை நெறிகளை உயர்தரத்தில் வழங்கி சிறப்பை அடைந்தபோதும், கற்கை நெறிகளை முகாமைத்துவம் செய்து சிறப்பை அடைந்த போதும் மற்றும் நிறுவனத்தின் ஆராட்சி அபிவிருத்தி சூழலை உருவாக்கி சிறப்பை அடைந்த போதும் தந்திரோபாய தொடர்பை தனியார்துறையுடன் கட்டியெழுப்பி தேசிய அபிவிருத்தி பங்களிப்பு செய்தபோது வினைத்திறன் மற்றும் வினையாற்றலான நிர்வாகம்சார் செயற்பாட்டின் மூலம் சிறப்பை அடைந்தபோதும் கவர்ச்சிகரமான கற்பித்தலையும் கற்கைநெறி மற்றும்

நிர்வாக சூழலின் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்தபோதும், செயற்பாட்டுத்திட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்காக உள்ளடக்கப்பட்ட 16 செயற்பாடுகளில் 2 மட்டுமே மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளின் போதிய அளவினை உறுதிசெய்வதற்கு மீளாய்வாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் 2014 ஆம் ஆண்டில் மீடியா மற்றும் குரல் மற்றும் படத் தயாரிப்பு பயிற்சி நெறி (உயர் டிப்ளோமா) ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் இப் பயிற்சி நெறி மேற்கொள்ள விசேட அறிவுள்ள விரிவுரையாளர் இல்லாமையால் 2014 ஆம் ஆண்டிற்கு பின் பயிற்சி நெறிக்கு மாணவர்களை ஆட்சேர்க்கப்படவில்லை.

(ஆ) 2014 யூன் 01 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக புதிய அரங்கத்தில் டிப்ளோமா சான்றிதழ் கொடுக்கும் வைபவத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ரூபா. 69,900 பெறுமதியான மடிக்கணனி ஒன்று காணாமல் போயிருந்த போதிலும் அது பற்றிய முறையான விசாரணை நடத்தி நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) நிறுவனத்திற்காக நிர்வாகம் மற்றும் கல்வி தொடர்பாக நிர்மானிக்கப்பட்ட கட்டடம் 27.86 பேச்சர்ஸ் உள்ள காணி கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு சொந்தமாக இருந்த போதும் அக்காணியின் உரிமை மாற்றம் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.3 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

2016 மார்ச் மாதத்தில் ரூபா. 10,000,000 நிலையான வைப்பு 4.5 வீதம் வட்டிக்காக 70 நாட்கள் முதலீடு செய்ய இருந்த போதிலும் அவ் முதலீடு 2017 யூன் வரை அவ்வாறே கொண்டு செல்லப்பட்டிருந்தது. மேற்படி முதலீடு ஒரு வருடத்திற்காக முதலீடு செய்திருந்தால் அத்திகதிக்குள் 8.25 வீதம் வருட வட்டிப்படி ரூபா. 825,000 வட்டி வருமானம் ஈட்ட கூடியதாக இருந்த போதிலும் குறுங்கால முதலீடு செய்யப்பட்டதால் நிறுவனத்துக்கு ரூபா. 375,000 பெறுமதியான வட்டி கிடைக்காமல் போனது.

## 4.4 விளைவற்ற மற்றும் பயன்பாடற்ற சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டில் மீடியா ஆய்வுகூடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2011 ஆம் வருடத்தில் இருந்து 2013 ஆண்டு வரைக்கும் ரூபா. 10,425,293 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா. 14,378 பெறுமதியான மேசை ஒன்றும் கொள்வனவு செய்திருந்தது. ஆனாலும் இந்த ஆய்வுகூடம் 2011 ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தப்படாமல் இருந்தது. அத்துடன் அதற்காக வாங்கிய உபகரணங்கள் அத்திகதிகளில் இருந்து விளைவற்றதாக இருந்தது. ஆய்வுகூடம் சரியான முறையில் பயன்படுத்துவதற்காக அல்லது அந்த உபகரணங்களை உபயோகிப்பதற்கான பயிற்சிநெறி வழங்க தகுதிவாய்ந்த நிரந்தர பதவியணியினர் ஆட்சேர்ப்பதற்காக நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் இல்லை என நிறுவன பணிப்பாளரால் 2017 ஒக்டோபர் 04 ஆம் திகதி அறிவித்திருந்தார்.

(ஆ) மீளாய்வாண்டு முடிவிலுள்ள காசு மற்றும் குறுங்கால முதலீடு நிலுவைகளின் கூட்டுமொத்த தொகை ரூபா. 338,656,044 பெறுமதியும் இவ் நிலுவையில் செலவு செய்யப்படாத மூலதன மானியம் ரூபா. 23,723,718 உள்ளடங்கியிருந்தது. அதனால் அக் காசுகள் நிறுவனத்தின் நோக்கம் வினைத்திறனாக அடைவதற்காக பயன்படுத்தப்படாமல் தொடர்ச்சியாக உபயோகமற்றிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஒரு ஊழியருக்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிப்பணம் கட்டப்படாமையால் ரூபா. 31,850 மேலதிக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

Auditor General's Department

4.6 **மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மனித வள மேம்பாட்டு நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட 97 பதவியணியினரில் 67 பதவியணியினரே உள்ளபோதும் 38 குறைவாக காணப்பட்டது. நிறுவனத்தின் வேலைகள் சரியாக இடம்பெறுவதற்காக தேவையான கல்விசார் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட விரிவுரையாளர் 09 பதவியினரில் 02 பதவி வெற்றிடமாக இருந்தது.

(ஆ) அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு உள்ள குறைவுக்கான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாது 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் 19 பேரும் அலுவலகப் பணியாளர் மற்றும் சுகாதார ஊழியர் 21 பேரும் ஆட்சேர்த்திருந்தது.

5. **கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை**

5.1 **கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய இல பீஈடி/12 ஆகிய அரச வியாபார சுற்றறிக்கைப்படி நிறுவனத்தில் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கை அடைவதற்காக குறைந்தது 03 வருடத்துக்காவது கூட்டிணைந்த திட்டம் ஒன்று செய்யப்பட்டு அது வருடாந்தம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தப்பட வேண்டும். ஆனாலும் இந்த நிறுவனம் கூட்டுத் திட்டம் ஒன்றும் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆண்டுவரைக்கும் செயற்பாடு செய்திருந்த போதும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை.

5.2 **பெறுகைத் திட்டம்**

2016 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 12 விடயங்களுக்காக ரூபா. 2,015,899 பெறுமதியான செலவு செய்து கொள்வனவு செய்திருந்தது. இதனால் பெறுகைத் திட்டம் செய்யும் போது நிறுவனத்துக்கு தேவையான அளவு கொள்வனவு செய்வது பற்றி பொருத்தமாக கருத்தில்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

Auditor General's Department

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறையாடுகள் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிதிச் சொத்து முகாமைத்துவம் | நிதிச் சொத்து பதிவேடு தயாரிக்கப்படவில்லை மற்றும் ஆண்டுக்குரிய இருப்பு மெய்யாய்வு செய்யப்படவில்லை. |
| (ஆ) | முதலீட்டு முகாமைத்துவம் | முதலீட்டிற்காக திறைசேரி அனுமதி பெறப்பட்டமை மற்றும் தேவைப்பாட்டிற்கிணங்க முதலீடு செய்யப்படவில்லை. |
| (இ) | வருமான முகாமைத்துவம் | பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் இனங்கண்டு கணக்கீட்டுக்கு கொண்டுவரப்படவில்லை. |
| (ஈ) | கணக்கீடு | i. பதவியினருக்கான தேவைப்பாட்டிற்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட பதவியணியினரை மாற்றம் செய்யப்படவில்லை. மற்றும் குறைந்த பதவியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>ii. பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் வகைப்படுத்தப்படாமல் கணக்கீடு செய்யப்படவில்லை. |
| (உ) | ஊழியர் கடன் கட்டுப்பாடு | உத்தியோகத்தரிடம் கடன் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த மனிதவள மேம்பாட்டு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1979 இன் 11 ஆம் இலக்க மனிதவள மேம்பாட்டு நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 2<br>2.1 | **நிதிக்கூற்றுகள்**<br>**முனைபழியுள்ள அபிப்பிராயம்** | இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மனித மேம்பாட்டு நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும். | ஏற்றுக்கொள்ளப்பட்டது | |
| 2.2<br><br>2.2.1 | **நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்**<br><br>**கணக்கீட்டு குறைபாடுகள்** | பினவரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | **(அ)** | நிறுவனத்தின் குறுகிய கால பயிற்சி நெறிக்காக பயன்படுத்தப்படும் வங்கிகணக்கிள் நீண்ட காலமாக இனங்காணப்படாத ரூபா. 3,996,475 வைப்புக்கள் எந்த வருமான மூலம் என இனங்காணப்படாது அட்டுறு செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வருமான ஆதாரங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதுடன் மேலதிக வருமான ஆதாரங்களை இனங்காண்பதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான ஆதாரங்கள் இனங்காணப்பட்டு அதுவே 2017 ஆம் ஆண்டில் கணக்குகளில் திருத்தப்பட்டன. |
| | **(ஆ)** | அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள், முற்பணங்கள் மற்றும் அறவிடப்படவேண்டியவைகளில் உள்ள பெறுமதி நிதி நிலமையில் நடைமுறையல்லா சொத்தில் காட்டப்பட்டுள்ளன. | எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான நடவடிக்கை எடுப்பதற்கு அவதானிப்புச் செலுத்தப்பட்டது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 2.2.2 | **கணக்காய்விற்கான சான்றின்மை** | நிதிக்கூற்றுக்களில் கணப்பட்டுள்ள ரூபா 52,995,480 நிதிச்சொத்து நிலுவையை உறுதிப்படுத்துவதற்காக நிதிச்சொத்து பதிவேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களுக்காக மென்பொருள் பொதி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது மற்றும் இது எதிர்காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை அனுப்புவதில் பயன்படுத்தப்படும். | நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு 2017 ஆம் ஆண்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டது. |
| 2.3 | **கிடைக்க வேணடிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்** | சிரேஸ்ர விரிவுரையாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 191,100 மற்றும் ஒரு அலுவலருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா. 84,944 உம் கடன் நிலுவை முறையே 13 வருடம் மற்றும் 6 வருடம் கடந்துள்ள போதும் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் குறித்த விரிவுரையாளர் அவரது இடர்க் கடன் மீதி ரூ. 191,000 நிலுவையாக இருந்த போது பணி நிறுத்தம் செய்யப் பட்டிருந்தார் அத்துடன் அதனைத் தொடர்ந்து மீளவும் பணியில் அமர்த்தப் பட்டிருந்தார். அடுத்த வருடம் அளவில் இந்தத் தொகை முற்றாக அறவிடப்படும்.<br><br>இந்த அலுவலர், அவரது இடர்க் கடனில் ரூ. 84,944 நிலுவையாக இருந்த போது சேவையில் இருந்து ஓய்வுபெற்று பிறிதொரு நிறுவனத்தில் (இலங்கை மின்சார சபை) இணைந்திருந்தார். எவ்வாறாயினும், அவரது பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியினை தீர்க்கும் போது கடன் நிலுவைத் தொகையான ரூ. 84,944 உம் மற்றும் ஒரு தொகையான ரூ. 70,861 வட்டியாகவும் அறவிடப்பட்டு இருந்தது. | இந்தத் தொகை 2018 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| 2.4 | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை** | | பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன. | | |
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | | | | |
| | (அ) | பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவைகள் | | | |
| | (i) | 1 வது அத்தியாயம் 2.2 ஆம் பந்தி | மேலதிக நேர வேலை செய்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது தாபனவிதிக்கோவையில் உள்ளபடி கொடுப்பனவு செய்வதற்கு பதிலாக நிலையான படிகள் கொடுத்தமையால் மீளாய்வாண்டில் ரூபா. 325,283 மேலதிக நேரக்கூலி கூடுதலாக கொடுக்கப்பட்டமை பற்றி மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | இந்தக் கொடுப்பனவுகள் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கற்கைநெறிகளில் இருந்து பெறப்பட்ட நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப் பட்டிருந்தன, மற்றும் கொடுப்பனவுகள் இந்தக் கற்கைநெறிகளில் இருந்து பெறப்படுகின்ற நிதியத்தில் இருந்தும் கூட மேற்கொள்ளப்படும்.<br><br>தற்போது நிறுவனத்திடம் விரிவுரை மண்டபங்கள் இல்லாமை காரணமாக, அவை ஏனைய பீடங்களிடம் இருந்து வாடகைக்குப் பெறப்பட வேண்டி உள்ளது. இந்த மண்டபங்களில் பணிபுரிகின்ற ஊழியர்கள் நிறுவனத்தின் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தின் கீழ் வராமையினால், அவர்களை மேலதிக நேர அடிப்படையில் பணிக்கு அமர்த்த முடியாது. ஆகையால் ஒரு நிலையான கொடுப்பனவு இந்த ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | (ii) | xx அத்தியாயம் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்தி | நிறுவனத்தில் கல்வி மற்றும் கல்விசாரா அனைத்து அலுவலகர்களும் வருகை மற்றும் வெளிச்செல்லுல் விரவடையாளம் இடம் நேரம் இடப்படவேண்டிய போதும் கல்விசார் பதவியணியினரால் 06 அலுவலர்கள் வருகைதந்தது பற்றி உறுதிப்படுத்தாமல் ரூபா 14,513,885 சம்பளம் மற்றும் படிகள் வழங்கப்பட்டிருந்தது. | விரிவுரையாளர்களினால் நடாத்தப்பட்ட விரிவுரைகள் பற்றிய விபரங்கள் ஒரு பதிவேட்டில் பேணப்படுகின்றன. | |
| | (ஆ) | இலங்கை சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் - 756 | 2016 திசெம்பர் 31 க்கு இருப்பு மெய்மையாய்வு செய்யப்படவில்லை. | பல வருடங்களாக கணக்காய்வு ஒன்று நடாத்தப்பட்டு இருந்திராத போதிலும், பொருட்களின் கையிருப்புக்கள் தொடர்பில் ஒரு பொருள் மெய் ஆய்வு ஒன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டு இருந்தது. | 2017 ஆம் ஆண்டுக்கான பொருட்களுக்கான பொருள் மெய் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. |
| | (இ) | 2015 யூன் 14 அந் திகதிய இல 03/2015 ஆகிய அரச நிதி சுற்றறிக்கை | குறித்த நோக்கம் முடிவடைந்த நேரத்தில் சீர்செய்யப்படவேண்டிய போதிலும் தடவைகள் வழங்கப்பட்ட கூட்டுமொத்த தொகை ரூபா 44,925 பெறுமதியான முற்பணம் சீர்செய்ய 60 - 110 நாட்கள் வரையான காலம் முடிவடைந்திருந்தது. மற்றும் 08 சந்தர்ப்பங்கள் தொடர்பாக கூட்டுமொத்த தொகை ரூபா 115,381 பெறுமதியான முற்பணம் 2017 ஜனவரி 24 ஆம் திகதி வரை சீராக்கம் செய்யப்படவில்லை. | சமர்பிக்கப்பட்ட சிட்டைகளில் உள்ள குறைபாடுகள், சிட்டைகள் பெற்றுக் கொள்ளப்படாமை முதலியன காரணமாக சில சந்தர்ப்பங்களில் முற்பணங்களைத் தீர்ப்பதில் சில தாமதங்கள் இருந்த போதும், பெற்றுக் கொள்ளப்பட்ட அனைத்து முற்பணங்களினதும் நிலுவைத் தொகைகளும் முறையாகத் தீர்க்கப் பட்டிருந்தன. முன்னைய வருடத்துடன் ஒப்பிடப்பட்ட போது, இந்த விடயப் பரப்பில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருக்கின்றது, மற்றும் எதிர்காலத்தில் நிலமையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| | (ஈ) | 2004 யூலை 29 ஆம் திகதி இல பீடீஈ/25 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அரச வியாபாரங்களுக்கு சொந்தமான காசு முதலீடு செய்யும் போது அது சம்பந்தமாக திறைசேரியில் அனுமதி பெறவேண்டியிருந்த போதும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 89.5 மில்லியன் மற்றும் 2016 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் பெறுமதியான முதலீடு சம்பந்தமாக திறைசேரி அனுமதி பெறப்படவில்லை என்பது பற்றி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | ஏற்கனவே பொதுத் திறைசேரி இந்த ஒப்புதலைப் பெறுவதற்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | (உ) | 1995 யூலை 14 ஆம் திகதிய இல 636 ஆகிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சைகள் நடந்த திகதியில் இருந்து 3 மாத காலப்பகுதிக்குள் அதன் பெறுபேறு வெளியிடவேண்டியிருந்த போதும் அதற்கு எதிராக நிறுவனத்தில் 2015 மற்றும் 2016 வருடத்தில் நடாத்தப்பட்ட 5 பரீட்சைக்கான பெறுபேறு வெளியிடுவதற்கு 5 - 7 மாதம் வரை தாமதமாகியிருந்தது. 2016 யூன் மாதத்தில் நடைபெற்ற பரீட்சைக்கான பெறுபேறு கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 30 வரை வெளியிடப்படவில்லை. | கற்கைநெறிகளில் போதிக்கும் அநேகமான விரிவுரையாளர்களில் அனேகமானோர் பல பிற பீடங்களுடன் இணைக்கப்பட்டு இருக்கின்றனர், மற்றும் அவர்கள் அந்த பீடங்களுக்கு முன்னுரிமை தருகின்றமையாலும் கூட, சில கற்கைநெறிகளின் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் 5 இலிருந்து 7 மாதங்கள் வரையில் சில தாமதங்கள் இருந்தன. அத்தகைய சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்கு ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்தது, மற்றும் இது எதிர்காலத்தில் கவனத்தில் கொள்ளப்படும். | அனைத்து ஆசிரியர் வெற்றிடங்களுக்குமான ஆட்சேர்ப்புக்களும் 2018 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டிருந்தன. |
| 3<br>3.1 | **நிதிசார் மீளாய்வு**<br>**நிதிசார் விளைவுகள்** | | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டுக்கான நிறுவக செயற்பாடுகளில் நிதி விளைவு ரூபா 61,576,424 மிகையாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டில் மிகையாக ரூபா. 24,437,356 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா. 37,139,068 முன்னேற்றத்தை காட்டுகின்றமைக்கான காரணம் பயிற்சி நெறிக்கான செலவு ரூபா. 33,437,619 ஆல் குறைவடைந்தமையாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா. 2,112,639 ஆல் அதிகரித்தமையும் ஆகும்.<br><br>2012 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் ரூபா. 19,061,471 ஆக இருந்த மிகை 2014 ஆம் வருட முடிவில் ரூபா. 11,340,232 ஆக குறைவடைந்துள்ளது. அதன் பின் வருடங்களில் சாதாரணமாக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா. 576,424 ஆக காணப்படுகிறது. அப்படியாக இருந்த போதிலும் நிதி பெறுபேற்றிற்கு நடைமுறையல்லா சொத்தில் உள்ள உத்தியோகத்தரிற்கு கிடைத்த சம்பளத்திற்காக பெறுமானத்தேய்வு மீளாய்வு செய்யும் போது 2012 ஆம் வருடத்தில் ரூபா. 49,124,600 பெறுமதியான பங்களிப்பும் 2014 ஆம் ஆண்டு முடிவில் ரூபா. 47,458,572 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வு ஆண்டு முடிவு வரை ரூபா. 104,774,561 வரை அதிகரித்திருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 4 | செயற்பாட்டு மீளாய்வு | | | |
| 4.1 | செயலாற்றுகை | கற்கை நெறிகளை உயர்தரத்தில் வழங்கி சிறப்பை அடைந்தபோதும், கற்கை நெறிகளை முகாமைத்துவம் செய்து சிறப்பை அடைந்த போதும் மற்றும் நிறுவனத்தின் ஆராட்சி அபிவிருத்தி சூழலை உருவாக்கி சிறப்பை அடைந்த போதும் தந்திரோபாய தொடர்பை தனியார்துறையுடன் கட்டியெழுப்பி தேசிய அபிவிருத்திப ங்களிப்பு செய்தபோது வினைத்திறன் மற்றும் வினையாற்றலான நிர்வாகம்சார் செயற்பாட்டின் மூலம் சிறப்பை அடைந்தபோதும் கவர்ச்சிகரமான கற்பித்தலையும் கற்கைநெறி மற்றும் நிர்வாக சூழலின் மூலம் நிறுவனத்தின் நோக்கத்தை அடைந்தபோர்தும், செயற்பாட்டுத்திட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்காக உள்ளடக்கப்பட்ட 16 செயற்பாடுகளில் 2 மட்டுமே மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.<br><br>செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நிறைவேற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளின் போதிய அளவினை உறுதிசெய்வதற்கு மீளாய்வாண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை நிறுவனத்தினால் வெளிப்படுத்தப்படவில்லை. | இந்த விடயத்தின் கீழ் முன்மொழியப்பட்ட செயல் திட்டத்தில், கீழே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் ஏனையவை 2017 ஆண்டு தொடர்பானவை.<br><br>1. ஒரு மாணவர் ஆலோசனை நிலையத்தை ஏற்படுத்துதல்<br><br>2. விரிவுரையாளர்களை மதிப்பீடு செய்வதற்கு சகா மீளாய்வு முறைமையை தொடருதல்<br><br>3. கல்வி முறைமையை மதிப்பீடு செய்வதற்கு தர உத்தரவாத அலகு ஒன்றினை ஏற்படுத்துதல்<br><br>4. கற்றல் முகாமைத்துவ முறையினை (LMS) மேம்படுத்தி தொழிலாளர் கல்வி இளமாணி நிகழ்ச்சித் திட்டத்திற்கும் மற்றும் ஏனைய கற்கை நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் (அறிமுகப் படுத்தப்பட உள்ள) பயன்படுத்துதல்<br><br>5. இணையவழி தொடரறா விண்ணப்ப முறைமை<br><br>இந்த விடங்களுக்கு இடையே, 2 மற்றும் 4, 2016 ஆம் ஆண்டில் கூறப்பட்டிருந்தது அத்துடன் மேலும் மேம்படுத்தப்படுகின்றன. | 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 4.2 | முகாமைத்துவ செயற்பாடுகள் | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (அ) | நிறுவனத்தினால் 2014 ஆம் ஆண்டில் மீடியா மற்றும் குரல் மற்றும் படத் தயாரிப்பு பயிற்சி நெறி (உயர் டிப்ளோமா) ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் இப் பயிற்சி நெறி மேற்கொள்ள விசேட அறிவுள்ள விரிவுரையாளர் இல்லாமையால் 2014 ஆம் ஆண்டிற்கு பின் பயிற்சி நெறிக்கு மாணவர்களை ஆட்சேர்க்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |
| | (ஆ) | 2014 யூன் 01 ஆம் திகதி கொழும்பு பல்கலைக்கழக புதிய அரங்கத்தில் டிப்ளோமா சான்றிதழ் கொடுக்கும் வைபவத்திற்காக பயன்படுத்தப்பட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ரூபா. 69,900 பெறுமதியான மடிக்கணனி ஒன்று காணாமல் போயிருந்த போதிலும் அது பற்றிய முறையான விசாரணை நடத்தி நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தொலைந்த கணினி ஒன்று தொடர்பாக, அறிக்கையிடுவதற்கு ஒரு- உறுப்பினர் குழு ஒன்று 27-11-2015 அன்று நியமிக்கப்பட்டது, ஆனால் எவ்வாறாயினும் 05-01-2017 அளவில் கூட அறிக்கை நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப் படவில்லை. ஆகையால் இந்தத் தொகையை அறவிடுவதற்கு 05-01-2017 அன்று கடிதம் ஒன்று வழங்கப்பட்டது, மற்றும் 10-01-2017 அன்று பதில் ஒன்று பெற்றுக்கொள்ளப் பட்டது, அத்துடன் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | குழுவினால் விசாரணைகள் இறுதியாக்கப்பட்டிருந்தன. |
| | (இ) | நிறுவனத்திற்காக நிர்வாகம் மற்றும் கல்வி தொடர்பாக நிர்மானிக்கப்பட்ட கட்டம் 27.86 பேச்சர்ஸ் உள்ள காணி பொழும்பு பல்கலைக்கழகத்தக்கு சொந்தமாக இருந்த போதும் அக்காணியில் உரிமை மாற்றம் செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்தக் காணி கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமானது மற்றும் இந்த விடயம் தொடர்பில் 2017 ஆம் ஆண்டிலிருந்து பதிவு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு அவதானிப்புச் செலுத்தப்பட்டிருந்தது. | |
| **4.3** | **தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்** | 2016 மார்ச் மாதத்தில் ரூபா. 10,000,000 நிலையான வைப்பு 4.5 வீதம் வட்டிக்காக 70 நாட்கள் முதலீடு செய்ய இருந்த போதிலும் அவ் முதலீடு 2017 யூன் வரை இவ்வாறே கொண்டு செல்லப்பட்டிருந்தது. மேற்படி முதலீடு ஒரு வருடத்திற்காக முதலீடு செய்திருந்தால் அத்திகதிக்குள் 8.25 வீதம் வருட வட்டிப்படி ரூபா. 825,000 வட்டி வருமானம் ஈட்ட கூடியதாக இருந்த போதிலும் குறுங்கால முதலீடு செய்யப்பட்டதால் நிறுவனத்துக்கு ரூபா. 375,000 பெறுமதியான வட்டி கிடைக்காமல் போனது. | கட்டுமான வேலைகளுக்குப் பணம் தேவைப்படுகின்ற போது விடுவிப்பதன் பொருட்டு ஒரு தொகைப் பணம் 7 நாள் வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு இருந்தது. | தற்பொழுது, பணம் நிலையான வைப்புக்களில் மாத்திரமே முதலீடு செய்யப்படுகின்றன. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 4.4 | **விளைவற்ற மற்றும் பயன்பாடற்ற சொத்துக்கள்** | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (அ) | 2011 ஆம் ஆண்டில் மீடியா ஆய்வுகூடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2011 ஆம் வருடத்தில் இருந்து 2013 ஆண்டு வரைக்கும் ரூபா. 10,425,293 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா. 14,378 பெறுமதியான மேசை ஒன்றும் கொள்வனவு செய்திருந்தது. ஆனாலும் இந்த ஆய்வுகூடம் 2011 ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்தப்படாமல் இருந்தது. அத்துடன் அதற்காக வாங்கிய உபகரணங்கள் உபயோகிப்பதற்கான பயிற்சிநெறி வழங்க தகுதிவாய்ந்த நிரந்தர பதவியணியினர் ஆட்சேர்ப்பதற்காக நிறுவனத்திற்கு சந்தர்ப்பம் இல்லை என நிறுவன பணிப்பாளரால் 2017 ஒக்டோபர் 04 ஆம் திகதி அறிவித்திருந்தார். | நிறுவனம் இந்த ஊடக ஆய்வுகூடத்தினைப் பேணுவதற்கோ அல்லது ஒரு திறன்வாய்ந்த நிரந்தர ஊழியரை ஆட்சேர்த்து இதனை ஒரு இலாபகரமான கற்கைப் பாடநெறியாக தொடர்வதற்கோ சாத்தியமில்லை, மேலும் நிறுவனத்தின் நிகழ்ச்சித் திடங்களை மறுசீரமைப்பதன் கீழ் தற்போதைய நிறுவனத்தின் மனித வளங்கள் மற்றும் இந்த ஆய்வுகூடத்தில் தயாராகக் கிடைக்கக் கூடியதாக உள்ள வளங்களைப் பயன் படுத்தக்கூடிய கற்கைநெறிகளை மாத்திரம் தொடர வேண்டும் அல்லது அவற்றினை இலாபகரமாகப் பயன்படுத்தக் கூடிய வேறு பிரிவுக்கு மாற்ற வேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டிருந்தது. இது சம்பந்தமாக கலந்துரையாடல்கள் தொடர்கின்றன. | கல்விக் குழுவின் அனுமதியின் பிரகாரம், இந்த அலகிலிருந்த பொருட்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பிறிதொரு பிரிவிற்கு பாரப்படுத்தப்பட்டு, தற் சமயம் இந்தப் பொருட்கள் அந்தப் பிரிவினால் உபயோகப்படுத்தப்படுகின்றன. |
| | (ஆ) | மீளாய்வாண்டு முடிவிலுள்ள காசு மற்றும் குறுங்கால முதலிடு நிலுவைகளின் கூட்டுமொத்த தொகை ரூபா. 338,656,044 பெறுமதியும் இவ் நிலுவையில் செலவு செய்யப்படாத மூலதன மானியம் ரூபா. 23,723,718 உள்ளடங்கியிருந்தது. அதனால் அக் காசுகள் நிறுவனத்தின் நோக்கம் வினைத்திறனாக அடைவதற்காக பயன்படுத்தப்படாமல் தொடர்ச்சியாக உபயோகமற்றிருந்தது. | 2017 ஆம் ஆண்டில் இது ஏற்கனவே செலவிடப் பட்டிருந்தது. | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| 4.5 | **இனங்காணப்பட்ட நட்டங்கள்** | ஒரு ஊழியருக்கு அனுமதிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதிப்பணம் கட்டப்படாமையால் ரூபா. 31,850 மேலதிக கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது | |
| 4.6 | **மனித வள முகாமைத்துவம்** | பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (அ) | மனித வள மேம்பாட்டு நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட 97 பதவியணியினரில் 67 பதவியணியினரே உள்ளபோதும் 38 குறைவாக காணப்பட்டது. நிறுவனத்தின் வேலைகள் சரியாக இடம்பெறுவதற்காக தேவையான கல்விசார் பதவிக்காக அனுமதிக்கப்பட்ட விரிவுரையாளர் 09 பதவியினரில் 02 பதவி வெற்றிடமாக இருந்தது. | 2016 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட ஆளணி 59 ஆக இருந்தது. வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது, அத்துடன் 2 நூலக உதவியாளர்கள், 3 வேலை உதவியாளர்கள் மற்றும் 11 முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் பொருத்தமான பிரிவுகளில் இருந்து 9 முகாமைத்துவ உதவியாளர்கள், மற்றும் 6 தொழில்நுட்ப உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்குப் பட்டியல்கள் அழைக்கப் பட்டிருந்தன. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 2 விரிவுரையாளர்கள் ஆட்சேர்க்கப் பட்டனர். 2018 ஆம் ஆண்டில் மேலும் இரண்டு விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. ஒரே தடவையில் அனைத்து விரிவுரையாளர்களையும் ஒரே நாளில் ஆட்சேர்ப்பது தொடர்பிலான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு, (அனைத்து விரிவுரையாளர்களும் ஒரே தடவையில் ஏழாட்டை விடுப்பினைக் கோருவன போன்றன) இந்த வெற்றிடங்களை நிரப்புவதில் ஒரு கணிசமான அளவு நேர இடைவெளி இருக்க வேண்டும். | உயர் கல்வி மற்றும் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட 01.06.2018 திகதிய அறிவித்தலுக்கு இணங்க, தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்கான தெரிவுப் பரீட்சையினை/ நேர்முகத் தேர்வினை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கணக்குப் பதியுனர் மற்றும் சாரதி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|
| | (ஆ) | அனுமதிக்கப்பட்ட பதவிகளுக்கு உள்ள குறைவுக்கான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாது 2016 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் 19 பேரும் அலுவலகப் பணியாளர் மற்றும் சுகாதார ஊழியர் 21 பேரும் ஆட்சேர்த்திருந்தது. | 25 உதவியாளர்கள் மற்றும் பல்வேறு அவ்வாறான வேறு பதவி நிலைகளில் நிறுவனத்தின் அவசரத் தேவைகளைப் பொறுத்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு வேண்டுகோள் தொடர்பில், 2017 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு இருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி முறைகளுக்கு இணங்க ஒப்பந்த அடிப்படையிலான பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் நிரப்பப்படுகின்றன. |
| 5. | **கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை** | | | |
| 5.1 | **கூட்டிணைந்த திட்டம்** | 2003 யூன் 02 ஆம் திகதிய இல பீஈடீ/12 ஆகிய அரச வியாபார சுற்றறிக்கைப்படி நிறுவனத்தில் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கை அடைவதற்காக குறைந்தது 03 வருடத்துக்காவது கூட்டிணைந்த திட்டம் ஒன்று செய்யப்பட்டு அது வருடாந்தம் மீளாய்வு செய்து இற்றைப்படுத்தப்பட வேண்டும். ஆனாலும் இந்த நிறுவனம் கூடுத் திட்டம் ஒன்றும் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஆண்டுவரைக்கும் செயற்பாடு செய்திருந்த போதும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டிற்கான பெரு நிறுவனத் திட்டம் புதுப்பிக்கப்பட்டது ஆனால் கல்விசார் பேரவையின் ஒப்புதல் பெற்றுக்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2018-2022 காலப் பகுதிக்கான பெருநிறுவனத் திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு இருந்தது. |
| 5.2 | **பெறுகைத் திட்டம்** | 2016 ஆம் ஆணடிற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத 12 விடயங்களுக்காக ரூபா. 2,015,899 பெறுமதியான செலவு செய்து கொள்வனவு செய்திருந்தது. இதனால் பெறுகைத் திட்டம் செய்யும் போது நிறுவனத்துக்கு தேவையான அளவு கொள்வனவு செய்வது பற்றி பொருத்தமாக கருத்தில்கொள்ளப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தாயரிக்கப்படுகின்ற போது தவறுகள் ஏதும் ஏற்படுவதனைத் தடுப்பதற்கு அறிவுறுத்தப் பட்டிருக்கின்றது. | |
| 6. | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | கணக்காய்வில் இவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் நிறுவகப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது. | | |

| நிதிக்கூற்று தொடர்பிலான தாக்கம் | | | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் | 2018 ஆம் ஆண்டளவில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள், தற்போதைய நிலை மற்றும் மேம்பாடு |
|---|---|---|---|---|---|
| | **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | | **அவதானிப்புக்கள்** | | |
| | (அ) | நிதிச் சொத்து முகாமைத்துவம் | நிதிச் சொத்து பதிவேடு தயாரிக்கப்படவில்லை மற்றும் ஆண்டுக்குரிய இருப்பு மெய்யாய்வு செய்யப்படவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டு இருப்பதுடன் வருடாந்த பொருள் மெய் ஆய்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டது. |
| | (ஆ) | முதலீட்டு முகாமைத்துவம் | முதலீட்டிற்காக திறைசேரி அனுமதி பெறப்பட்டமை மற்றும் தேவைப்பாட்டிற்கிணங்க முதலீடு செய்யப்படவில்லை. | ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்காக திறைசேரியுடன் தொடர்பு கொள்ளப் பட்டிருக்கின்றது. | |
| | (இ) | வருமான முகாமைத்துவம் | பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் இனங்கண்டு கணக்கீட்டுக்கு கொண்டுவரப்படவில்லை. | வங்கி வைப்புக்களை நேரடியாக இனங்காண்பதற்கான முறைமை ஒன்றினைத் தயாரிப்பது தொடர்பிலான கலந்துரையாடல்கள் தொடர்கின்றன, மற்றும் இந்த விளைவிற்கு மென்பொருள் ஒன்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | குறித்த மென்பொருள் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு, மென்பொருளினைப் பயன்படுத்துவதற்காக குறித்த வங்கியுடன் ஜுன் 2018 இல் உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| | (ஈ) | கணக்கீடு | (i) பதவியினருக்கான தேவைப்பாட்டிற்கு ஏற்ப அனுமதிக்கப்பட்ட பதவியணியினரை மாற்றம் செய்யப்படவில்லை. மற்றும் குறைந்த பதவியினரை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆளணியினை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கின்றது. | |
| | | | (ii) பயிற்சிக்கான வருமானம் சரியான முறையில் வகைப்படுத்தப்படாமல் கணக்கீடு செய்யப்படவில்லை. | | |
| | (உ) | ஊழியர் கடன் கட்டுப்பாடு | உத்தியோகத்தரிடம் கடன் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவையில் உள்ள கடன்கள், 2017 ஆம் ஆண்டு இறுதிக்கு முன்னதாக இந்தப் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. | இந்தத் தொகை 2018 ஆம் ஆண்டில் முழுவதுமாக அறவிடப்பட்டது. |